# புதிய உலகிற்குள் பிரவேசித்தல்... (Breaking Away)

"**உங்களின் குழந்தைக்கு நீங்கள் அளிக்கவல்ல மிகச்சிறந்த பரம்பரை சொத்து யாதெனில், குழந்தை சுயமாக செயலாற்ற அனுமதிப்பதே. அதாவது, குழந்தை தன்னுடைய சுயமுயற்சியின் மூலம் இயங்குவது**", *ஐசடோரா டன்கன்.*

"என்னை பலர் முன்னிலையில் கட்டிப்பிடிக்காதீர்கள் அல்லது முத்தம் கொடுக்காதீர்கள்" என்று நீங்கள் கொடுத்த முத்தத்தின் எச்சியைத் துடைத்துக்கொண்டே உங்கள் குழந்தை சொல்கிறது.

குழந்தைகளின் மீதான நமது பிரியத்தையும் பாசத்தையும் நினைத்த நேரத்தில், நினைத்த இடத்தில் வெளிப்படுத்தும் நமது மனப்பாங்கு, 6 முதல் 9 வயதுக்கு இடையிலுள்ள குழந்தைகளுக்கு சங்கடத்தை அளிக்கிறது. வெகுவிரைவில், குழந்தையின் பற்கள் பெரியவர்களின் பற்களைப்போல் பரிணாமம் அடைந்து, குழந்தை ஒரு புதிய மேம்பாட்டு நிலையினுள் செல்கிறது. இந்தப் பருவத்தில், குழந்தைகளிடம் நேரக்கூடிய ஒரு மிக முக்கிய மாற்றம் என்னவெனில், அவர்கள் குடும்பம் மற்றும் அதன் உறுப்பினர்கள் என்ற சிறிய பரப்பைக் கடந்து, வெளிஉலகம் மற்றும் பல்வேறான மனிதர்கள் என்ற ஒரு பெரிய பரப்பிற்குள் பிரவேசிப்பதே ஆகும்.

சுயசார்பு நிலைக்கு மாறிக்கொள்ளுதல் என்பது, ஒவ்வொரு மனிதனுக்கும் பிறப்பிலேயே அமையப்பெறும் பண்பாகும். இந்த சுயசார்புக்கான அடையாளங்களை நாம் குழந்தையினிடத்தில், ஒவ்வொரு பருவத்திலும் ஒவ்வொரு வடிவத்தில் காணலாம். மிகச்சிறு குழந்தைகள் தங்கள் கை-கால்களை அசைத்து உதைப்பதிலும், 2 வயது பருவத்தில் உள்ள குழந்தைகள், தான் விரும்பாத விஷயங்களுக்கு வலுவாக மறுப்பு தெரிவிப்பதிலும், மூன்று வயது காலகட்டத்திலுள்ள குழந்தைகள், நடவடிக்கைகளை, தாமே செய்ய முற்படுவதிலும், நமக்குப் புலப்படுத்துகிறார்கள்.

***ஒரு நல்ல பெற்றோராக இருப்பது தொடர்பான சிறந்த ஆலோசனைகளுள் முக்கியமானது, குழந்தைகள் பெரியவர்களாக வளர வளர, நாம் எப்படி சிறியவர்களாக வளர்வது என்பதை அறிந்து கொள்வதாகும்.***

* நமது குழந்தைகளிடத்தில், சுதந்திரம் மற்றும் சுயசெயல்பாடு ஆகியவற்றை ஊக்குவித்து, பொறுப்பை ஒப்படைப்பது எவ்வாறு?

* சுயசார்பு வளர்ச்சியடையும் காலகட்டத்தை எவ்வாறு பயன்படுத்திக்கொள்வது?

* சார்புத்தன்மையை நோக்கிய குழந்தையின் உணர்வை மட்டுப்படுத்துவது எப்படி?

**முதலில், பொருத்தமான இடங்களில், தங்களின் விருப்பத் தேர்வுகளை (choices) மேற்கொள்ள, குழந்தைகளை அனுமதிக்க வேண்டும்** - *உதாரணமாக, ஒரு* 3 *வயது குழந்தையை, நீ என்ன கலர் சட்டை அணிய விரும்புகிறாய்? என்று கேட்கலாம்.* 6 *வயது காலகட்ட குழந்தையை, துணிக்கடைக்கு அழைத்துச்சென்று, குழந்தைக்கான ஆடையை தேர்வுசெய்யும் செயல்பாட்டில் ஈடுபடுத்தலாம்.* 10 *வயது காலகட்ட குழந்தையை, தூங்கும் நேரத்தை முடிவுசெய்வதில் ஈடுபடுத்தலாம்.* 16 *வயது காலகட்டத்திலுள்ள குழந்தையை, அபாயகால முடிவுகள் மேற்கொள்வதில் பங்கேற்கச் செய்யலாம்.*

**தனக்கான திறன்களைப் பெறுவதற்கான குழந்தையின் முயற்சிகளுக்கு நாம் மதிப்பளிக்க வேண்டும்** - *தனது ஷு நாடாவை தானே கட்டிக்கொள்ளுதல் போன்ற திறன்களை வளர்க்க, சிறிது காலஅவகாசமும், லாவகமும் தேவைப்படும். அந்த வேலையை, நம் குழந்தைக்காக நாமே செய்துகொடுப்பதற்கு பதிலாக, 'இதைக் கற்பதற்கு, உனக்கு நான் உதவலாமா?' என்பதாகக் கேட்டு, அவர்களுக்கான ஆக்கப்பூர்வ பங்கை ஆற்ற வேண்டும். நாம் செய்யும் தேவையற்ற உதவிகள், சுயசார்பை நோக்கிய குழந்தையின் வளர்ச்சிக்கு ஊறுவிளைவிப்பவை என்பதை மறத்தலாகாது.*

**முயற்சிக்கிறோம், ஆனால், துருவி துருவி கேட்பதல்ல** - *குழந்தைகளிடம் அதிகளவிலான கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருப்பதானது, ஆர்வத்தை வெளிப்படுத்துவதைவிட, நம்பிக்கையின்மையையே வெளிக்காட்டும். நமது ஆசிரியரோ, மேலதிகாரியோ அல்லது இன்னபிற நபர்கள் யாரேனுமோ, நம்மிடம் துருவி துருவி கேள்விக்கேட்டு, அதனால் நாம் எரிச்சலும் சோர்வும் அடைந்த அனுபவங்கள் சில, கட்டாயம் நம் நினைவில் இருக்கும். குழந்தைகளுடனான நம்பிக்கையை வளர்க்க, அவர்களுடன் சில எளிய வார்த்தைகளைப் பகிர்ந்துகொண்டாலே அதிக நன்மைகள் விளையும். 'பள்ளி சென்றுவிட்டு திரும்பும் குழந்தையை, 'வீட்டிற்கு உன்னை வரவேற்கிறேன்' மற்றும் 'உன்னை மீண்டும்*

கண்டதில் மிக்க மகிழ்ச்சி' போன்ற சிறுவாக்கியங்களைப் பயன்படுத்தி வரவேற்கும்போது, இருவருக்குமான நம்பிக்கை வலுப்படுகிறது.

**வீட்டிற்கு வெளியே கண்டறிந்த அல்லது கற்றுக்கொண்ட அம்சங்களின் மூலம் கேள்விகளுக்குப் பதிலளிக்கவும், சிக்கல்களைத் தீர்க்கவும் குழந்தைகளை ஊக்குவித்தல்** - விஷயம் தெரிந்த நபர்கள் அல்லது அனுபவஸ்தர்களை, தமது அறிவுத்தேடல்களுக்கு பயன்படுத்திக்கொள்ளும் மனப்பாங்கை உருவாக்கிக்கொள்ள, குழந்தைகளுக்கு உதவுங்கள். உதாரணமாக, ஒரு சிறிய நாய்க்குட்டியை உங்கள் குழந்தை பராமரித்து வளர்க்க விரும்புகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்போது, அதுதொடர்பான கேள்விகளை தனியே எழுதிக்கொண்டு, கால்நடை மருத்துவர் அல்லது நாய்கள் வளர்ப்பதில் அனுபவமும் அறிவும் உள்ளவர்கள் ஆகியோரை சந்தித்து உரையாட உதவலாம். மேலும், அதுதொடர்பான புத்தகங்களைப் படிப்பதற்கும் ஊக்குவிக்கலாம்.

**கேள்வியை மறுதொடக்கம் செய்து, தேடலை ஊக்குவிப்பதன் வாயிலாக, தமக்காக சிந்திக்க கற்கும் வகையில், குழந்தைகளுக்கு நம்மால் உதவ முடியும்** - அறிவுக்களஞ்சியமாக திகழ்வதற்கு மிகவும் அவசரப்படக்கூடாது. "அப்பா, ராக்கெட் கலம் எப்படி விண்ணில் நேராக சீறிப்பாய்கிறது?" என்ற கேள்வியை குழந்தை ஒரு தந்தையை நோக்கி எழுப்புகையில், அவர் உண்மையிலேயே ராக்கெட் விஞ்ஞானியாக இருந்தாலும்கூட, பதிலை உடனே நேரடியாக சொல்லிவிடாமல், மற்றொரு பதில் கேள்வியின் வழியாகவே சொல்ல வேண்டும். "ராக்கெட் கலம் நேராக சீறிப்பாய்வதன் காரணம் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?" என்பதுபோன்ற பதில் கேள்விகளைக் கேட்கலாம்.

**உங்கள் குழந்தையின் எதிர்கால லட்சியம், அடைவதற்கு கடினமானதாக இருப்பினும்கூட, ஊக்குவிப்பதே முக்கியம்** - பல நேரங்களில், குழந்தைகள் தங்களுடைய எதிர்கால லட்சியங்கள் குறித்து பகிர்ந்து கொள்ளும்போது, அவர்களுக்கு எதிர்மறையான மதிப்பீடுகள் அளிக்கப்பட்டு, அவர்களின் கனவுகள் பலவீனப்படுத்தப்படுகின்றன. உதாரணமாக, ஒரு குழந்தை, தான் ஒரு தத்துவ ஞானியாக ஆகப்போகிறேன் என்று தன் எதிர்கால ஆசையைப் பகிர்ந்துகொண்டால், வீட்டிலுள்ள தந்தையோ அல்லது வேறு பெரியவர்களோ, "எனக்கும் இதுபோல ஒரு ஆசை இருந்தது. கடைசியில் அதை நான் மறக்க வேண்டியதாயிற்று" என்று கூறி சூழலையேக் கெடுத்துவிடுவார்கள். அது மிகவும் தவறு. குழந்தை உங்களிடம் வந்து, நான் ஒரு தத்துவஞானியாகப் போகிறேன் என்று சொன்னால், "தத்துவஞானியாகி, நீ

செய்ய விரும்புவது என்ன?" என்ற ஒரு ஆக்கப்பூர்வ கேள்வியைக் கேட்டு, குழந்தையின் மனதிற்கு வலுவூட்ட வேண்டும்.

**இளம்வயதிலேயே, பொருத்தமான விருப்பத்தேர்வுகளை உருவாக்குவதற்கு குழந்தைகளை அனுமதிப்பதன் வாயிலாக, குழந்தைகளின் சுதந்திரத்தன்மையையும் சுயசெயல்பாட்டையும் ஊக்குவித்தல்** - சுயசார்பு, நிபுணத்துவம் மற்றும் திறன்களைப் பெற்றுக்கொள்வதற்கான குழந்தைகளின் முயற்சிகளுக்கு மதிப்பளியுங்கள். தேவைக்கதிகமான கேள்விகளைக் கேட்காதீர்கள். முடிவுகளை எடுப்பதற்கும், சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் உதவக்கூடிய அம்சங்களை, வீட்டிற்கு வெளியேயுள்ள உலகிலிருந்து பெறக்கூடிய வகையில் ஊக்குவிக்க வேண்டும். குழந்தைகள் ஏதேனும் சந்தேகங்களையோ அல்லது கேள்விகளையோ கேட்டால், அவற்றுக்கு உடனடியாக பதில்சொல்ல அவசரம் காட்டக்கூடாது. தமக்கான விஷயங்களைக் கண்டறிவதற்கான நேரம் எனும் சிறந்தப் பரிசை குழந்தைகளுக்கு அளிக்கவும். குழந்தைகளுடைய விருப்பங்கள், நம்பிக்கைகள் மற்றும் கனவுகளை, அவர்களுடைய கண்களின் ஊடாக காண முயலவும்.

நாளுக்கு நாள் மேற்கொள்ளும் விருப்பத்தேர்வுகளின் வாயிலாக, உங்களின் குழந்தை, முதிர்ச்சியை நோக்கிய தனது பயணத்தில் தொடர்ந்து வெற்றிகரமாக பயணிக்கிறது. குழந்தைகள் போகப்போக பெரியவற்றை எதிர்கொள்கிறார்கள். நாமோ, போகப்போக சிறியவற்றை எதிர்கொள்கிறோம். இந்தப் பயணம், அவர்கள் வளர்ந்து, நம் முன்பாக நின்று, நம் கண்களை நேருக்கு நேராக நோக்கும் வரையில் தொடரும்.

***************


மூல ஆங்கிலக் கட்டுரை: ***Maren Schmidt* (மாண்டிசோரி ஆய்வாளர்)**

தமிழ் மொழிபெயர்ப்பு: சொ.பிரசன்ன பாரதி (ரிலீஃப் ஃபவுண்டேஷன், சென்னை)

மேலதிக விபரங்களுக்கு: *www.relieffoundation.in*